**சுருக்கம்**

பணியமைப்பு–நெடுஞ்சாலைத் துறை–மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பு –திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தை நிர்வாக நலன் காரணமாக பிரித்து செய்யாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் ஏற்படுத்துதல்–ஆணைகள்–வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண். 165 நாள். 18.10.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம் ஐப்பசி மாதம் 1 ஆம் நாள்.

படிக்கவும்

1. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் கடித எண். பிடி2/319/2012. நாள் 06.01.2013
2. அரசு கடித எண் 506/எச்.ஆர்.1/2013-1. நாள் 22/01/2013 மற்றும் 14/02/2013.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை, சென்னை–5 அவர்களின் கடித எண். 874/நிர்வாகம் 2(1)/2013, நாள். 15.02.2013
4. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை, சென்னை–5 அவர்களின் கடித எண். 874/நிர்வாகம் 2(1)/2013, நாள். 24.07.2013

-----

**ஆணை:**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டில் திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, கோட்டம் இயங்கி வருகிறது. அக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் கீழ்காணுமாறு 7 உட்கோட்டங்கள் மற்றும் 9 பிரிவுகளும், 2,596.91 கி.மீ. அரசு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

| வ.எண். | உட்கோட்டம் | பிரிவு |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | திருவண்ணாமலை வடக்கு |
| | | திருவண்ணாமலை தெற்கு |
| | | திருவண்ணாமலை இயந்திரம் |
| 2. | ஆரணி | ஆரணி |
| 3. | செங்கம் | செங்கம் |
| 4. | செய்யாறு | செய்யாறு |
| 5. | போளூர் | போளூர் |

| | | |
|---|---|---|
| 6. | தண்டராம்பட்டு | தண்டராம்பட்டு |
| 7. | வந்தவாசி | வந்தவாசி |

<u>அரசு சாலைகளின் விவரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | மாநில நெடுஞ்சாலைகள் | 447.10 கி.மீ |
| 2. | மாவட்ட முக்கிய சாலைகள் | 441.25 கி.மீ |
| 3. | மாவட்ட இதர சாலைகள் | 1655.31 கி.மீ |
| 4 | கரும்பு அபிவிருத்தி சாலைகள் | 53.25 கி.மீ |
| | **மொத்தம்** | **2596.91 கி.மீ** |

2. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் தற்சமயம் போக்குவரத்து செறிவின் அடிப்படையில் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், வேகமாக பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள அனைத்து சாலைகளையும் நல்ல முறையில் பராமரிக்கவேண்டியது மிக அவசியமாகிறது. மேலும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் கடிதத்தில், செய்யாரில் வருவாய் கோட்ட அலுவலகம், சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகம், கல்வித்துறை கோட்ட அலுவலகம் ஆகியவை இயங்கி வருகின்றன. எனவே, செய்யாரை தலைமையிடமாகக் கொண்டு, நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் உருவாக்குதல் பொருத்தமாக இருக்கும். எனவே, நிர்வாக வசதிக்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாரை தலைமையிடமாக கொண்டு புதியதாக கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டத்தை உருவாக்க வேண்டியுள்ளது என தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு தெரிவித்துள்ளதாக முதன்மை இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் 20 பணியிடங்கள் கொண்டு தோற்றுவிக்கப்படுகின்றன. திருப்பூர் ஆய்வுக் கோட்ட அலுவலகம் 11 பணியிடங்களை கொண்டு இயங்கி வருகிறது. இவ்வாய்வு கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 2 உட்கோட்டங்கள் மற்றும் 4 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகத்தின் ஒரு உதவி வரைவாளர் பணியிடத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்தும் மீதமுள்ள கீழ்க்கண்ட 10 பணியிடங்களை செய்யார் புதிய கோட்டத்திற்கு மறு பணியமர்வு மூலம் வழங்குவதாக முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு அலகின் பணியிடங்கள் | மறுபணியமர்வு முறையில் செய்யார் கோட்டத்தில் பணியமர்த்தப்படும் பணியிடங்கள் |
|---|---|
| கோட்டப் பொறியாளர் | 1 |
| இளநிலை வரை தொழில் அலுவலர் | 1 |
| உதவியாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 1 |
| தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | 1 |
| ஓட்டுநர் | 1 |
| பதிவுரு எழுத்தர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 2 |
| காவலர் | 1 |
| மொத்தம் | 10 |

4. மேலும், இவ்வாய்வு கோட்டத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த 2 உட்கோட்டம் மற்றும் 4 பிரிவு அலுவலகங்களை கோயம்புத்தூர் ஆய்வுக் கோட்ட, கோட்டப் பொறியாளரின்

கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாகவும், கீழ்க்காணும் 10 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்து வழங்குமாறு முதன்மை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

| பதவியின் பெயர் | ஊதியம் + தரஊதியம் / எண்ணிக்கை | |
|---|---|---|
| முதுநிலை வரை தொழில் அலுவலர் | 9300–34800 + 4900 | 1 |
| இளநிலை வரை தொழில் அலுவலர் | 9300–34800 + 2800 | 2 |
| கண்காணிப்பாளர் | 9300–34800 + 4800 | 1 |
| கோட்டக் கணக்கர் | 9300–34800 + 4800 | 1 |
| உதவியாளர் | 5200–20200 + 2800 | 3 |
| இளநிலை உதவியாளர் | 5200–20200 + 2400 | 1 |
| தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | 5200–20200 + 2400 | 1 |

5. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலசப்பாக்கத்தை தலைமையிடமாகக் கொண்டு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டம் / பிரிவு அலுவலகம் ஏற்படுத்துதல் அவசியமென கருத்துரு தெரிவித்துள்ளதாக கோட்டப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவண்ணாமலை அவர்கள் அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில் கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு சாலைகளின் விவரங்களை கருத்தில் கொண்டு கலசப்பாக்கத்தை தலைமையிடமாகக் கொண்டு (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட கட்டுப்பாட்டில் திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டு இயந்திர பிரிவு செயல்படுகிறது என்றும் நிர்வாக காரணங்களின்பேரில் திருவண்ணாமலை (நெ) இயந்திர பிரிவை கலசப்பாக்கம் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவாக மறுபணியமர்வு செய்யவும் சம்பந்தப்பட்ட இயந்திரப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், இனிமேல் திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வடக்கு பிரிவு கட்டுப்பாட்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து கலசப்பாக்கம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு அலுவலகம் போளூர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எனவும் முதன்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) திருவண்ணாமலையை தலைமையிடமாக கொண்டு இயங்கும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தை நிர்வாக நலன் காரணமாக பிரித்து செய்யாரை தலைமையிடமாகக் கொண்ட புதிய கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டம் தோற்றுவிக்கப்படுகிறது. இப்புதிய செய்யார் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு கீழ்காணுமாறு 20 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன.

| வ. எண். | கட்டுமானம் மற்றும் பாரமரிப்பு அலகின் பணியிடங்கள் | மறுபணியமர்வு முறையில் செய்யார் கோட்டத்தில் பணியமர்த்தப்படும் பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1 | கோட்டப் பொறியாளர் | 1 | 0 |
| 2 | முதுநிலை வரை தொழில் அலுவலர் | 0 | 1 |
| 3 | இளநிலை வரை தொழில் அலுவலர் | 1 | 2 |
| 4 | கோட்டக் கணக்கர் | 0 | 1 |
| 5 | கண்காணிப்பாளர் | 0 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 6 | உதவியாளர் | 1 | 3 |
| 7 | இளநிலை உதவியாளர் | 1 | 1 |
| 8 | தட்டச்சர்/ கணினி இயக்குபவர் | 1 | 1 |
| 9 | ஓட்டுநர் | 1 | 0 |
| 10 | பதிவுரு எழுத்தர் | 1 | 0 |
| 11 | அலுவலக உதவியாளர் | 2 | 0 |
| 12 | காவலர் | 1 | 0 |
| | மொத்தம் | 10 | 10 |

ஆ) செய்யாறு (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தால் கீழ்காணும் சாலைகள், உட்கோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்கள் நிர்வகிக்கப்படும்.

| வ. எண் | உட்கோட்டம் | மாநில நெடுஞ்சாலைகள் | மாவட்ட முக்கிய சாலைகள் | மாவட்ட இதர சாலைகள் | கரும்பு அபிவிருத்தி சாலை | மொத்தம் கி.மீ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆரணி | 53.10 | 66.40 | 198.20 | 4.80 | 322.50 |
| 2 | செய்யார் | 40.30 | 84.05 | 246.30 | 18.60 | 389.25 |
| 3 | வந்தவாசி | 100.50 | 79.10 | 319.70 | --- | 499.30 |
| | மொத்தம் | 193.90 | 229.55 | 764.20 | 23.40 | 1211.05 |

| உட்கோட்டம் | பிரிவு |
|---|---|
| ஆரணி | ஆரணி |
| செய்யார் | செய்யார் |
| வந்தவாசி | வந்தவாசி |

இ) திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தால் கீழ்காணும் சாலைகள், உட்கோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்கள் நிர்வகிக்கப்படும். மேலும் உட்கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்.

| வ. எண் | உட்கோட்டம் | மாநில நெடுஞ்சாலைகள் | மாவட்ட முக்கிய சாலைகள் | மாவட்ட இதர சாலைகள் | கரும்பு அபிவிருத்தி சாலை | மொத்தம் கி.மீ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | 129.38 | 33.20 | 338.35 | 16.60 | 517.53 |
| 2 | தண்டராம்பட்டு | 58.20 | 30.60 | 128.80 | 10.20 | 227.80 |
| 3 | செங்கம் | 52.30 | 50.00 | 225.06 | --- | 215.16 |
| 4 | போளூர் | 60.30 | 123.50 | 258.60 | 2.57 | 444.97 |
| | மொத்தம் | 273.38 | 212.10 | 890.61 | 29.37 | 1405.46 |

| வ.எண் | உட்கோட்டம் | பிரிவு |
|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை வடக்கு<br>திருவண்ணாமலை தெற்கு |
| 2 | தண்டராம்பட்டு | தண்டராம்பட்டு |
| 3 | செங்கம் | செங்கம் |
| 4 | போளூர் | போளூர்<br>கலசப்பாக்கம் |

ஈ செய்யார் கோட்ட அலுவலகம் மற்றும் கோட்டப் பொறியாளர் இல்லத்திற்கு தொலைபேசி இணைப்புக்கான அனுமதி (அலுவலக தொலைபேசி ரூ.1000 X 12 =ரூ.12000 (ஆண்டுக்கு) இல்ல தொலைபேசி ரூ. 1000 X 12 =ரூ.12000 (ஆண்டுக்கு) வழங்கப்படுகிறது.

உ செய்யார் கோட்ட அலுவலக எதிர்பாரா அலுவலக செலவுகளுக்காக நிலையான முன்பணம் ரூ.1000/– வழங்கப்படுகிறது.

ஊ கோட்ட அலுவலகத்திற்கு தேவைப்படும் படிவங்கள் எழுதுபொருட்கள் மற்றும் பதிவேடுகளை, எழுதுபொருள் மற்றும் அச்சக துறையிலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

எ கோட்ட அலுவலகத்திற்கான வாடகை மாதம் ரூ.15,000/–வீதம் 1 ஆண்டுக்கு ரூ.1,80,000/– (தோராயமாக) வழங்கப்படுகிறது. மேலும் கலசப்பாக்கம் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு அலுவலகம் இயங்க கட்டிட வாடகை மாதம் ரூ.3000/– வீதம் ஆண்டிற்கு ரூ.36000/– வழங்கப்படுகிறது.

ஏ நிர்வாக காரணங்களின்பேரில் திருவண்ணாமலை (நெ) இயந்திர பிரிவை கலசப்பாக்கம் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவாக மறுபணியமர்வு செய்யவும் சம்பந்தப்பட்ட இயந்திரப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வடக்கு பிரிவு கட்டுப்பாட்டில் தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

ஐ திருப்பூர் ஆய்வுக் கோட்ட கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 2 உட்கோட்டங்கள் மற்றும் 4 பிரிவு அலுவலகங்கள், கோயம்புத்தூர் ஆய்வுக் கோட்ட, கோட்டப் பொறியாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாய் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 6–இல் மறுபணியமர்வு மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்படும் புதிய பணியிட பணியாளர்களின் ஊதியம், அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி மற்றும் இதர படிகள் ஆகியவற்றிற்கான செலவினம் மற்றும் தொலைபேசிக் கட்டணம், சில்லரை செலவினம், வாடகை ஆகிய செலவினங்கள் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் உள்ள துணை கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும். மேலும் 2013–14 ஆம் ஆண்டிற்கு இக்கணக்குத் தலைப்பில் போதுமான நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

> "3054 – சாலைகளும், பாலங்களும் – 80–பொது–001
> நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I- திட்டத்தில் சேராதது–
> AE. நிருவாக பணியாளரமைப்பு (பொது) நெடுஞ்சாலை
> (த.தொ.கு 3054–80–001–AE–0004)"

8. புதிய அலுவலகத்திற்கு கணினி மற்றும் அச்சுப் பொறி கொள்முதல் செய்வது குறித்து நெடுஞ்சாலைத் துறையின் தகவல் தொழில் நுட்ப பிரிவின் குறிப்பினைப் பெற்று 2014–15–ஆம் ஆண்டுகளுக்கான பகுதி–2 திட்டத்தில் கருத்துரு சமர்ப்பித்து தனியே பெற்றுக்கொள்ளுமாறும் முதன்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. செய்யார் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள உட்கோட்டங்கள்/பிரிவு அலுவலகங்கள் மற்றும் திருவண்ணாமலை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு போளூர் உட்கோட்ட அலுவலகங்கள் பிரிவு அலுவலக பணியாளர்களின் ஊதியம் தொடர்பாக அனுப்பப்படும் ஊதிய பட்டியல்கள் இதர வகையில் சரியாக இருந்தால் அவற்றை சரி பார்த்து அனுமதிக்குமாறும், உரிய சம்பளம் வழங்கும் அலுவலர் குறியீட்டுடன் (D.O.Code) வழங்குமாறும், தமிழ்நாடு கருவூலத் தொகுப்பு 70 குறித்த பதிவேட்டினை வழங்குமாறும் (Supply the book of T.N.T. Code 70) கருவூல அலுவலர், செய்யார் மற்றும் திருவண்ணாமலை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண். 17/DS(NV)/PW-I/2013, நாள். 17.10.2013–இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (நெ), திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, சென்னை–32.
இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை–25.
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), சென்னை–16.
தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்), சென்னை–32.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், சென்னை–20.
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), சென்னை–15.
தலைமைப் பொறியாளர் (தே.நெ), சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூல அலுவலகம்/சார்நிலை கருவூல அலுவலகம், திருப்பூர், திருவண்ணாமலை, செய்யார், செங்கம், போளூர், தண்டராம்பட்டு, ஆரணி, வந்தவாசி.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை–2.

நகல்
நிதி (பொ.ப.I) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(அ. மங்கையர்க்கரசி)
அரசு சார்புச் செயலாளர்.